**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 45** **நாள்: 19.02.2019**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், கோட்டம்–125க்குபட்ட சாந்தோம் அருகில் உள்ள குயில் தோட்டம் எதிரில் உள்ள மாநகராட்சி சாலையோர பூங்காவில் உரிய அனுமதி பெறாமல் வினி ஸ்டோர் என்ற விளம்பரப் பலகை வைக்கப்பட்டுள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் (692 SID) PGR புகார் பதிவு செய்யப்பட்டது.

அப்புகாரின் அடிப்படையில் விளம்பர பலகையை அகற்றுமாறு சம்மந்தப்பட்ட உரியமையாளரிடம் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சம்மந்தப்பட்ட உரிமையாளர் விளம்பர பலகையை அகற்றவில்லை, அதனால் 19.02.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் விளம்பர பலகை அகற்றிய போது, ஸ்டாலின் மற்றும் மூன்று நபர்கள் விளம்பர பலகையை அகற்றவிடாமல் மாநகராட்சி ஊழியர்களிடம் வாக்குவாதம் செய்தும், பணி செய்யவிடாமலும், அச்சுறுத்தும் வகையில் தரக்குறைவான வார்த்தைகளால் கொலை மிரட்டலும் விடுத்தனர். எனினும் மாநகராட்சி ஊழியர்கள் உரிய அனுதி பெறாமல் வைக்கப்பட்ட விளம்பர பலகையை உடனடியாக அகற்றினர்.

பின்னர், ஸ்டாலின் மற்றும் மூன்று நபர்கள் அப்பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி சாலையோர பூங்காவின் நுழைவு வாயிலை ஒட்டிய சுவரை சேதப்படுத்தியும், சாலை மறியல் செய்து பொது மக்களுக்கும், வாகனங்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

எனவே, மாநகராட்சி ஊழியர்களை பணி செய்யவிடாமல், அரசு சொத்திற்கு சேதம் விளைவித்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி இ1, மயிலாப்பூர் காவல் நிலையத்தில் மாநகராட்சி அலுவலர்களால் புகார் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் வழக்கு **(குற்ற எண் 114/2019 U/s 294 (b), 353, 506 (i) IPC r/w 3 (1) TNPPDL ACT)** பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு அரசு சொத்திற்கு சேதம் விளைவித்த ஸ்டாலின் என்பவர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**